**செய்தி வெளியீடு எண் : 1352** **நாள் : 16.12.2021**

**செய்தி வெளியீடு**

**கூட்டுறவுத் துறை சார்பில் 70 புதிய கூட்டுறவு மருந்தகங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (16.12.2021) தலைமைச் செயலகத்தில், கூட்டுறவுத் துறை சார்பில் தமிழகத்தின் 36 மாவட்டங்களில் 70 புதிய கூட்டுறவு மருந்தகங்களை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டில் கிராமப் பொருளாதார வளர்ச்சியில் கூட்டுறவு இன்றியமையாப் பங்கினை ஆற்றி வருகின்றன. மிகப்பெரிய சமூகப் பொருளாதார இயக்கமான கூட்டுறவு இயக்கம், வறுமையை ஒழிக்கவும், சமூக ஒருமைப்பாட்டை மேம்படுத்துவதிலும் முக்கியப் பங்காற்றி வருகிறது.

அந்த வகையில், கூட்டுறவுத் துறையின் 2021-22ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில், தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறை மூலம் 303 மருந்தகங்களில் விற்கப்படும் மருந்துகளுக்கு 20 சதவிகிதம் வரை தள்ளுபடி வழங்கப்படுகிறது. இந்த மருந்தகங்கள் நியாயவிலைக் கடைகள் போல வெளிச்சந்தைகளில் மருந்து பொருட்களின் விலைகளை கட்டுக்குள் வைத்திருக்கும் மிகவும் முக்கியமான சமூகப் பங்காற்றுகின்றன. இந்த எண்ணிக்கையை அடுத்த 5 ஆண்டுகளில் ஆண்டொன்றுக்கு 60 கடைகள் வீதம் மொத்தம் 600-ஆக உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, தமிழ்நாட்டில் 70 புதிய கூட்டுறவு மருந்தகங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்தார். அதன் விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | மாவட்டம் | மருந்தகங்கள் எண்ணிக்கை | இடங்கள் |
|---|---|---|---|
| 1 | அரியலூர் | 2 | உடையார்பாளையம், அரியலூர் |
| 2 | சென்னை | 4 | மயிலாப்பூர், இராயப்பேட்டை, கொளத்தூர், கொடுங்கையூர் |
| 3 | கோயம்புத்தூர் | 2 | வீரகேரளம், சரவணம்பட்டி |
| 4 | கடலூர் | 2 | லாலாப்பேட்டை, மங்களம்பேட்டை |
| 5 | தருமபுரி | 2 | ஓடைப்பட்டி, கடத்தூர் |

| | | | |
|---|---|---|---|
| 6 | திண்டுக்கல் | 2 | வத்தலகுண்டு,<br>பூஞ்சோலை |
| 7 | ஈரோடு | 2 | அந்தியூர்,<br>பெருந்துறை |
| 8 | கன்னியாகுமரி | 2 | அகஸ்தீஸ்வரம்,<br>விளவங்கோடு |
| 9 | கரூர் | 2 | வெங்கமேடு,<br>தான்தோன்றி மலை |
| 10 | கிருஷ்ணகிரி | 2 | கிருஷ்ணகிரி,<br>கட்டிக்கானப்பள்ளி |
| 11 | மதுரை | 2 | செக்கவூரணி,<br>ஒத்தக்கடை |
| 12 | நாகப்பட்டினம் | 2 | சிக்கல்,<br>கத்திரிப்புலம் |
| 13 | மயிலாடுதுறை | 2 | பூம்புகார்,<br>மன்னம்பந்தல் |
| 14 | நாமக்கல் | 2 | வலையப்பட்டி,<br>பரமத்திவேலூர் |
| 15 | நீலகிரி | 1 | மஞ்சூர் |
| 16 | பெரம்பலூர் | 2 | பெரம்பலூர்,<br>குன்னம் |
| 17 | புதுக்கோட்டை | 2 | மணமேல்குடி,<br>கீரனூர் |
| 18 | இராமநாதபுரம் | 2 | பரமக்குடி,<br>ஆர்.எஸ்.மங்கலம் |
| 19 | சேலம் | 2 | பள்ளப்பட்டி,<br>இளம்பிள்ளை |
| 20 | தஞ்சாவூர் | 2 | ஏனாதி,<br>நாச்சிக்கோட்டை |
| 21 | திருச்சி | 2 | பாலக்கரை,<br>டால்மியாபுரம் |
| 22 | திருநெல்வேலி | 2 | அம்பாசமுத்திரம்,<br>வள்ளியூர் |
| 23 | தென்காசி | 2 | தென்காசி,<br>சங்கரன் கோயில் |
| 24 | திருப்பூர் | 2 | உடுமலைப்பேட்டை,<br>மடத்துக்குளம் |
| 25 | திருவள்ளூர் | 2 | நாராம்பேடு,ஆர்.கே.பேட்<br>டை |
| 26 | திருவண்ணாமலை | 2 | களம்பூர்,<br>கீழ்பென்னாத்தூர் |
| 27 | திருவாரூர் | 2 | கூத்தாநல்லூர்,<br>வலங்கைமான் |
| 28 | தூத்துக்குடி | 1 | ஆறுமுகநேரி |
| 29 | வேலூர் | 2 | அணைக்கட்டு,<br>சாத்துப்பாளையம் |
| 30 | திருப்பத்தூர் | 2 | மாடப்பள்ளி,<br>திருப்பத்தூர் |

| | | | |
|---|---|---|---|
| 31 | இராணிப்பேட்டை | 2 | டி.கே.தங்கல், லாலாப்பேட்டை |
| 32 | விழுப்புரம் | 1 | கீழ்ப்பெரும்பாக்கம் |
| 33 | கள்ளக்குறிச்சி | 1 | உளுந்தூர்பேட்டை |
| 34 | விருதுநகர் | 2 | சிவகாசி, விருதுநகர் |
| 35 | செங்கல்பட்டு | 2 | செங்கல்பட்டு, சிங்கப்பெருமாள் |
| 36 | காஞ்சிபுரம் | 2 | முத்தியால்பேட்டை, அமராவதிப்பட்டினம் |
| | மொத்தம் | 70 | |

இந்த கூட்டுறவு மருந்தகங்கள் இயங்கி வரும் பகுதிகளில் தனியார் மருந்து கடைகளும் போட்டியின் காரணமாக விலை குறைப்பு செய்து விற்பனை செய்து வருகின்றன. இதனால், கூட்டுறவுத் துறை மூலம் நடத்தப்படும் மருந்தகங்களுக்கு பொது மக்களிடையே மிகப்பெரிய வரவேற்பு கிடைத்து வருகிறது. தனியார் மருந்தகங்களுக்கு நிகராக புதிதாக தொடங்கப்பட்டுள்ள மருந்தகங்கள் சிறந்த பொலிவுடன் விளங்கிட, அவற்றில் கணினி மற்றும் குளிர்சாதன வசதிகள் உள்ளிட்ட போதுமான உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மருந்தகத்திலும் ஒரு மருந்தாளுநர் மற்றும் உதவியாளர் பணியில் இருப்பர்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.இ.பெரியசாமி, மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கோ.தளபதி, திரு.ஆ.வெங்கடேசன், திரு.மு.பூமிநாதன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.முகமது நசிமுத்தின், இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு.அ.சண்முகசுந்தரம், இ.ஆ.ப., மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.எஸ்.அனீஷ் சேகர், இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) திருமதி மு.அருணா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

- - - -

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**